2000 மார்ச் 30]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒத்து வரவில்லை என்றால், நீங்கள் அடுத்தாற்போல் தனியாகப் போய்க் கேட்டுக் கொள்ளுங்கள்.

திரு. சி. ஞானசேகரன்: வேலை நடக்கிறது என்று சொல்கிறார். வேலை நடக்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது தேவையில்லை. உங்களுக்கு வாய்ப்புக் கொடுக்க வேண்டுமென்ற தேவையில்லை.

திரு. சி. ஞானசேகரன்: வேலை நடக்கிறது என்று சொல்கிறார். வேலை நடக்கவில்லை.......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி வேலை நடக்கவில்லை, உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்: பணி நடக்கிறது என்று சொல்லவில்லை. பாலம் கட்டுவதற்கான பணிகள் நடைமுறையிலே இருக்கிறது என்று சொன்னேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 152, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

152—

தொழில் நுட்பக் கல்லூரி

***21252—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, ஆத்தாலூரி அருள்மிகு வீரமாகாளியம்மன் ஆலயத்தில் அறநிலையத்துறையின் மூலமாக ஒரு தொழில் நுட்பக் கல்லூரி தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

[2000 மார்ச் 30

திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியிலுள்ள பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட ஏழையெளிய மாணவர்கள், தொழில் நுட்பக் கல்வி பயில வெளியூருக்குச் செல்ல வேண்டியுள்ளது. மேலும், அருள்மிகு வீரமாகாளியம்மன் கோவில் அறநிலையம் மூலமாகத் தொழில் நுட்பக் கல்லூரி தொடங்குவதற்குப் போதுமான இடமும் இருக்கிறது. மேலும், போதுமான நிதியாதாரம் இருப்பதாகவும் சொல்லப்படுகிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து, அங்கே ஒரு தொழில் நுட்பக் கல்லூரியைத் தொடங்க ஆவன செய்வாரா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-10

மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய உறுப்பினர் சொன்ன அந்தக் கோயிலின் மொத்த வருமானம் ஒரு ஆண்டிற்கு 3,62,410 ரூபாய்தான். இதை வைத்துக் கொண்டு அந்தக் கோயிலின் திருப்பணிகளை அல்லது அன்றாடப் பணிகளைத்தான் செய்ய முடியுமே தவிர, ஒரு தொழில் நுட்பக் கல்லூரி தொடங்கி நடத்த முடியாது.

இரண்டாவதாக, 10 ஆண்டுகளுக்கு முன்னால் வரை அறநிலையத் துறையில் கல்வி நிறுவனங்கள் அரசு உதவி பெறும் நிறுவனங்களாகத் தொடங்கப்பட்டன. அதற்குப் பிறகு தொடங்கப்படுகிற எந்த ஒரு நிறுவனமும் சுயநிதி நிறுவனமாகத்தான் தொடங்கப்பட வேண்டும் என்ற சூழ்நிலை எழுந்துள்ளது. எனவே, சுயநிதி என்ற நிலை வருகின்றபோது, அறநிலையத்துறை அப்படிப்பட்ட நிறுவனங்களைத் தொடங்கினால் பல்வேறு சிக்கல்களை உருவாக்கிவிடும் என்பதாலும் இதற்குமேலும் கல்வி நிறுவனங்களை இந்தத் துறையில் தொடங்குவதற்கு நடைமுறைச் சாத்தியம் இல்லை என்பதாலும் இந்தத் திட்டத்திற்கு எப்போதுமே வாய்ப்பில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 153, திரு. வி.கே. லட்சுமணன், மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.